**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கடலாடி**
**முன்னிலை:திரு.N.விஸ்வநாத், B.A.,B.L.,M.B.A.,L.L.M.**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**கடலாடி.**

**2024 ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 12 ம் நாள் திங்கட்கிழமை**

**I.A.No.02/2023**
**in**
**O.S.No.12/2022**

1. ஆஸ்டர்
2. யோகேஷ்
3. அருளானந்தம் சிங்கம் பர்னாந்து
4. யோவான்
5. சஞ்சாய்
6. மிக்கேல்
7. இன்னாசி சூசை ராஜா ...மனுதாரர்கள்/2 முதல் 8 பிரதிவாதிகள்

/எதிர்/

சிங்கம் லியோன் ... எதிர்மனுதாரர்/வாதி

இந்த இடைநிலை மனு என் முன்பாக 22.11.2023 அன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள்/2 முதல் 8 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.K.வேலுச்சாமி அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.J.உதுமான் அவர்கள் ஆஜராகியும், தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களைப் பரிசீலனை செய்தும், இன்று வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து வந்தும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

**உத்தரவு**

எதிர்மனுதாரர்/வாதி தாக்கல் செய்துள்ள அசல் வழக்கில் கூறியுள்ள சர்வே எண்.230/1ஏ இந்த எதிர்மனுதாரர்/வாதிக்கு வந்த வகையில் பாத்தியப்பட்டது என தீர்மானிக்க முதல்நிலை எழுவினா வனைய உத்தரவிடக்கோரி மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **மனுதாரர்கள்/2 முதல் 8 பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்.**

எதிர்மனுதாரர்/வாதி வழக்கில் பிராதில் வழக்கில் கண்டுள்ள சொத்து தனக்கு பாத்தியப்பட்டது என விளம்புகை செய்ய்கோரியும், அதன் தொடர்ச்சியாக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கக்கோரியும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், எதிர்மனுதாரர்/வாதிக்கு சர்வே எண்.230 யை பொறுத்து எந்த உரிமையும் இல்லாத நிலையில், சர்வே எண் குறிப்பிடாமல் வழக்கு தாக்கல் செய்ததன் காரணமாக நீதிமன்றத்தால் குறிப்பிடக்கூறியதால் பேனாவினால் சர்வே எண் எழுதப்பட்டுள்ளது என்றும், அந்த சர்வே எண் மனுதாரருக்கு பாத்தியப்பட்டது என்றும், எதிர்மனுதாரர்/வாதி பிராதில் கூறியுள்ளபடி பழைய சர்வே எண்.231 என்பது புதிய சர்வே எண்.230/1ஏ என்று எவ்வாறு ஏற்பட்டது என்பதை கூறவில்லை என்றும், வருவய் ஆவணங்களில் வருவாய் துறையினர் ஒரு சர்வே எண்ணை சர்டிவிசன் செய்வது என்றால் ஏற்கனவே இருக்கக்கூடிய சப்டிவிசன் எண்ணிற்கு பின்னிட்ட எண்ணைக்கொடுத்து அதற்கு புதிய சர்வே எண் 231 ஆக இருப்பது 232 ஆக மாறாமல் 230/1ஏ என்று மாற்றியுள்ளதாக பிராதில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், 1987ம் ஆண்டு முதல் நாளதுதேதி வரை சர்வே எண்230 மனுதாரர்கள் கைவசம் இருந்து வருகிறது என்றும், சர்வே எண்.230க்கு வடபுறம் சர்வே எண்.231ம் மேற்குபுறம் சர்வே எண்227ம், கிழக்கு பக்கம் சர்வே எண்.256ம் இருக்கிறது என்றும், எதிர்மனுதார்/வாதியின் சொத்தாக கருதப்படுவது சர்வே எண்.231 மட்டுமே என்றும், எதிர்மனுதாரர்/வாதிக்கு சர்வே எண்.230 எந்த வகையிலும் உரிமையோ, அனுபவமோ இல்லை என்றும், எதிர்மனுதாரர்/வாதி பிராதுடன் தாக்கல் செய்துள்ள வரைபடத்தில் ABCD பகுதியாக காட்டப்பட்டுள்ள பகுதி வாதிக்கு பாத்தியப்பட்ட சொத்து இல்லை என்றும், மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் பழைய சர்வே எண்.231, புதிய சர்வே எண்.230/1Aல் கண்ட என்று மோசடியாக வழக்கில் சேர்த்துள்ளதாகவும், பொய்யான விபரங்களை கூறி வழக்கினை தாக்கல் செய்துள்ளதாகவும், எனவே எதிர்மனுதாரர்/வாதிக்கு சர்வே எண்.230யை பொறுத்து எவ்வித பாத்தியமோ, அனுபவமோ இல்லை என்றும், எதிர்மனுதாரர்/வாதிக்கு விளம்புகை பரிகாரமும், நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரமும் கிடைக்க இயலாத நிலையில் உள்ளதால் எதிர்மனுதாரர்/வாதி தாக்கல் செய்துள்ள வழக்கில் முதல்நிலை எழுவினாவாக சர்வே எண்.230/1ஏ இந்த் எதிர்மனுதாரர்/வாதிக்கு எந்த வகையில்

பாத்தியப்பட்டது என்பதை முடிவெடுக்க முதல் நிலை எழுவினா வனையக்கோரி மனுதாரரால் மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>3) எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்.</u>**

சர்வே எண்.231 என்பது சர்வே எண்.230/1ஏ எனக் குறிப்பிட்டு எதிர்மனுதாரர் வழக்குத் தாக்கல் செய்துள்ளது அது சரியா இல்லையா என்பதையும் எதிர்மனுதாரர் வாங்கியுள்ள கிரைய ஆவணத்தில் கண்ட சொத்தினை அளப்பதற்கு ஆணையர் நியமனம் கோரி மனுத் தாக்கல் செய்துள்ளதாகவும், ஆணையர் தாவா சொத்தை பார்த்து அளந்து அம்சங்கள் குறித்தால் எதிர்மனுதாரர் கிரையம் வாங்கியுள்ள சொத்து எது என தெரிந்து விடும் என்பதால் அதைத் தடுக்கும் பொருட்டு மனுதார்கள் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளனர் என்றும், சர்வே எண்கள் மாற்றம் செய்யும் பொழுது மனுதார்கள் கூறுவது போல சப்டிவிசன் செய்யப்படுவதும் புதிய சர்வே எண்கள் கொடுக்கப்படுவதும் உண்டு என்றும், மேலும் சர்வே எண்கள் தவறு என்றாலும் கூட நான்குமால்களுக்குட்பட்ட சொத்து எதற்குள் அடங்கி வருகிறதோ அச்சொத்தே இறுதியானது என்றும், மனுதார்கள் குறிப்பிடுவது போல் சொத்திற்குள் வடக்கிலும், கிழக்கிலும், தெற்கிலும், மேற்கிலும் என்னென்ன சொத்துக்கள் அமைந்துள்ளன என்பதற்கு ஆணையர் சொத்தைப் பார்த்தாலே தெரியவந்து விடும் என்றும், எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள வரைபடத்தில் கண்டுள்ளபடி சொத்து பூமியிலிருந்து வருகிறது என்றும், எதிர்மனுதாரர்/வாதி வழக்கில் முறையாக தாவா சொத்து விபரம் குறிப்பிட்டு இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளதாகவும், தாவா சொத்து மனுதாரர்களுக்கு பாத்தியபட்டது அல்ல என்றும், மனுதார்கள் எதற்காக முதல்நிலை எழுவினாக்கள் வனைய வேண்டும் என்று கோரியுள்ளார்கள் என்பது சம்பந்தமாக எதுவும் தங்கள் மனுவில் கூறிக்கொள்ளவில்லை என்றும், வாதி வழக்கு விபரம் தவறு என்றாலோ, தாவா சொத்தின் விபரம் தவறு என்றாலோ அதற்காக முதல்நிலை எழுவினாக்கள் வனைய முடியாது என்றும், மனுதார்கள் சொல்லியுள்ள விபரத்திற்காக முதல்நிலை எழுவினாவை வழக்கு சம்பந்தமாகவோ, சொத்து விபரம் சம்பந்தமாகவோ வனைய முடியாது என்றும், அவ்வாறு வனைந்தாலும் அந்த எழுவினாக்கள் மற்ற எழுவினாக்களோடு சேர்ந்து முடிவு செய்யப்படவேண்டியது என்பதால் மனுவை

தள்ளுபடி செய்து உத்தரவிடக்கோரி எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4) இந்த இடைநிலை மனுவில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை யாதெனில் மனுதாரர் கோரியுள்ள பரிகாரம் மனுதாரருக்கு கிடைக்கத்தக்கதா? என்பதேயாகும்.

இம்மனுவில் இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. மனுதாரர் தரப்பில் ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.7 வரையிலான சான்றாவணங்களும், எதிர்மனுதாரர் தரப்பில் எ.ம.சா.ஆ.1 முதல் எ.ம.சா.ஆ.14 வரையிலான சான்றாவணங்களும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

5) இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன.

மனுதாரர் தரப்பில் எதிர்மனுதாரர்/வாதி அசல் வழக்கினை இந்நீதிமன்றத்தில் முதலில் தாக்கல் செய்த சமயத்தில் சர்வே எண் குறிப்பிடாமல் தாக்கல் செய்துவிட்டு பின்னர் பேனாவினால் சர்வே எண்ணை எழுதி திருத்தம் செய்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் மனுதாரர் தரப்பில் பொதுவாக ஒரு சர்வே எண் சப்டிவிசன் செய்யப்படும் போது அந்த எண்ணிற்கு அடுத்த எண்ணைதான் கொடுப்பார்கள் என்றும், ஆனால் இந்த வழக்கில் சர்வே எண்.231 என்று இருப்பதை 232 என்று மாற்றாமல் 230/1A என்று எவ்வித ஆவணங்களும் தாக்கல் செய்யாமல் வாதி திருத்தியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு வழக்கிற்கான எண் கொடுக்கப்படும் வரை அதில் திருத்தங்கள் செய்வதற்கான உரிமை வாதிக்கு உள்ளது. அதனடிப்படையில்தான் இந்த வழக்கிற்கு எண் கொடுக்கப்படுவதற்கு முன்பாகவே வாதி வழக்கினை திருத்தம் செய்துள்ளது ஏற்கத்தக்கது என்றே கருத வேண்டியுள்ளது.

ஆனால் எதிர்மனுதாரர் தரப்பில் அவ்வாறு இல்லை என்று மறுத்து ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டுள்ளது. பொதுவாக சப்டிவிசன் செய்யப்படும்போது அந்த எண்ணிற்கு அடுத்த எண்ணை கொடுப்பார்கள் அல்லது வாதி குறிப்பிட்டுள்ளதுபோல 230/1A என்றும் வருவாய்துறையில் கொடுப்பது வழக்கம் என்று எதிர்மனுதாரர் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது ஏற்கத்தக்கதாகவே உள்ளது.

எதிர்மனுதாரர் தரப்பில் சப்டிவிசன் செய்யப்பட்டதற்கும், அவரது வழக்கினை நிரூபிக்கவும் விசாரணை சமயத்தில் ஆவணங்கள் தாக்கல் செய்யப்போவதாக

வாதிடப்பட்டது ஏற்கத்தக்கதாகவே உள்ளது. மனுதாரர் தரப்பில் தெரிவித்துள்ளவாறு தாவா சொத்தானது மனுதாரர் அனுபவத்தில் உள்ளதா அல்லது எதிர்மனுதாரர் அனுபவத்தில் உள்ளதா என்பதை தற்சமயம் தீர்மானிக்க இயலாது. அதனை இருதரப்பு சாட்சியங்கள் மற்றும் ஆவணங்களின் அடிப்படையில் அசல் வழக்கில் முழு விசாரணை செய்த பின்னர்தான் தீர்மானிக்க இயலும்.

மனுதாரர் தரப்பில் தெரிவித்துள்ளவாறு எதிர்மனுதாரர்/வாதி இந்நீதிமன்றத்தை மோசடி செய்து ஏமாற்றும் நோக்கத்தில் சர்வே எண்ணை மாற்றம் செய்துள்ளாரா அல்லது ஆவணங்களின் அடிப்படையில்தான் சர்வே எண் குறிப்பிடப்பட்டுள்ளதா என்பதையும் அசல் வழக்கில் இருதரப்பு விசாரணையின் முடிவில்தான் தீர்மானிக்க இயலும். எனவே மேற்கண்ட காரணங்களின் அடிப்படையில் மனுதாரர் இம்மனுவில் கோரியுள்ளவாறு முதல் நிலை எழுவினா வரைய வேண்டியதற்கான காரணங்கள் எதுவும் மனுவில் குறிப்பிடப்படவில்லை என்று தீர்மானித்து அதனடிப்படையில் மனுதாரர் கோரியுள்ள பரிகாரங்களானது மனுதாரருக்கு கிடைக்கக்கூடியதல்ல என்று தீர்மானித்து அதனடிப்படையில் மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாகச் சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு 12.02.2024 இன்று அவையறிய பகரப்பட்டது.

N VISWANATH

Digitally signed by N VISWANATH
Date: 2024.02.12 12:24:54 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
கடலாடி.

<u>மனுதாரர்கள்/வாதிகள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:</u>

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.1 | – | தாவா சொத்தான சர்வே எண்.230/1A க்குரிய நில புலப்பட இணையதள நகல் |
| ம.சா.ஆ.2 | – | சர்வே எண்.230/1A ஆனது பிலவேந்திரன் பெயரில் இருந்து வருகிறது என்று கிராம நிர்வாக அலுவலரால் வழங்கப்பட்ட அடங்கல் |
| ம.சா.ஆ.3 | – | பட்டா எண்.728 சர்வே எண்.230/1A ஆனது 7, 8 |

| | | |
|---|---|---|
| | | பிரதிவாதிகளின் தகப்பனார் பிலவேந்திரன் மற்றும் இ.அலங்காரம், அருளானந்தம் சிங்கம் பர்னாந்து ஆகியோர் பெயரில் ஏற்பட்டுள்ள 10(1) இணையதள நகல் எண்ணம் – 3. |
| ம.சா.ஆ.4 | – | பட்டா எண்.728 சர்வே எண்.230/1A க்கு 7, 8 பிரதிவாதிகளின் தகப்பனார் பிலவேந்திரன் மற்றும் இ.அலங்காரம், அருளானந்தம் சிங்கம் பர்னாந்து ஆகியோர் பெயரில் ஏற்பட்டுள்ள அ-பதிவேடு இணையதள நகல் |
| ம.சா.ஆ.5 | – | பட்டா எண்.728 சர்வே எண்.230/1A க்கு 7, 8 பிரதிவாதிகளின் தகப்பனார் பிலவேந்திரன் மற்றும் இ.அலங்காரம், அருளானந்தம் சிங்கம் பர்னாந்து ஆகியோருக்கு கொடுக்கப்பட்ட பட்டா அசல் |
| ம.சா.ஆ.6 | – | சர்வே எண் 231, 231 ன் உட்பிரிவான 231/3A1 க்குரிய 10(1) அடங்கள் மற்றும் நில புலப்பட கணினி நகல் |
| ம.சா.ஆ.7 | – | 10.03.1987 தேதி பட்டா எண்.728 சர்வே எண்.230/1A க்கு 7, 8 பிரதிவாதிகளின் தகப்பனார் பிலவேந்திரன் மற்றும் இ.அலங்காரம், அருளானந்தம் சிங்கம் பர்னாந்து ஆகியோருக்கு கொடுக்கப்பட்ட 9(2) நோட்டீஸ் அசல் |

<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u>:

| | | |
|---|---|---|
| எ.ம.சா.ஆ.1 | – | 20.08.1987 தேதி வாதி பிலவேந்திரன் வகையறாவிடம் கிரையம் வாங்கிய கிரைய ஆவணம் |
| எ.ம.சா.ஆ.2 | – | 01.07.1992 தேதியிட்ட கிரைய ஆவணம் |
| எ.ம.சா.ஆ.3 | – | 02.07.1992 தேதியிட்ட 1ம் பிரதிவாதிக்கு பிலவேந்திரன் அவர்கள் மனைவி அடைக்கலம்மாள் வகையறாவிடம் எழுதிக்கொடுத்த அதிகார ஆவணம் |
| எ.ம.சா.ஆ.4 | – | 03.07.1992 தேதியிட்ட 1ம் பிரதிவாதி அலங்காரம் பர்னாந்து என்பவரிடம் அதிகார முகவர் எழுதிக்கொடுத்த 5 ஏக்கர் நிலத்தை கிரையம் வாங்கியதற்கான கிரைய ஆவணம் |
| எ.ம.சா.ஆ.5 | – | 07.11.1994 தேதியன்று 4ம் பிரதிவாதி வகையறாவிடம் கிரையம் வாங்கியதற்கான கிரைய ஆவணம் |
| எ.ம.சா.ஆ.6 | – | 08.11.1994 தேதியிட்ட தாவா சொத்தை 1 முதல் 6 பிரதிவாதிகள் கிரையம் கொடுத்த கிரைய ஆவணம் |
| எ.ம.சா.ஆ.7 | – | 07.01.2000 தேதி வாதி கிரையம் பெற்றதற்கான கிரைய ஆவணம் |
| எ.ம.சா.ஆ.8 | – | 13.04.1995 தேதி 1ம் பிரதிவாதியின் தகப்பனார் ராயப்பன் |

| | | |
|---|---|---|
| | | லியோன் என்பவருக்கு கிரையம் கொடுத்த கிரைய ஆவணத்தின் நகல் |
| எ.ம.சா.ஆ.9 | – | சர்வே எண்.231/3B க்கு புனித அன்னாள் கல்வி கழகத்திற்கு ஏற்பட்ட பட்டா எண்.10286 கணிணி நகல் |
| எ.ம.சா.ஆ.10 | – | சர்வே எண்.231 கான பட்டா (எண்ணம் 7) |
| எ.ம.சா.ஆ.11 | – | சர்வே எண்.231/3A1, 58/2 க்கு வழங்கப்பட்ட பட்டா |
| எ.ம.சா.ஆ.12 | – | சர்வே எண்.230/1A க்கான வில்லங்க சான்றிதழ் |
| எ.ம.சா.ஆ.13 | – | 27.12.2021 தேதியன்று தாவா சொத்தை வாதி அனுபவம் செய்ததற்கான கிஸ்து ரசீது |
| எ.ம.சா.ஆ.14 | – | பிராது வரைபடம் |

N VISWANATH

Digitally signed by N VISWANATH
Date: 2024.02.12 12:25:02 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
கடலாடி.

I.A.No.02/2023
in
O.S.No.12/2022

Date:12.02.2024
IA order